செ. கு. எண்: 215 நாள் : 20.11.2014

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின் அறிக்கை – **20.11.2014**

மதுரை மாவட்டம், வைகை அணையிலிருந்து, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசனப் பகுதிகள் III மற்றும் II-க்கு **வைகை அணையிலிருந்து** தண்ணீர் திறந்து விடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள வைகை பழைய பாசனப் பகுதிகள் III மற்றும் II-க்கு **வைகை அணையிலிருந்து 21.11.2014** முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள **1,09,620 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9